<u>சுருக்கம்</u>

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2010–11 ஆம் ஆண்டில் பணிபுரியும் மற்றும் சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் வாங்கி வழங்குதல்– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.05 நாள்:19–01–2011

தை 5, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை) எண். 31, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 28–06–2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.5433/ இவாததி.1/2010–2, நாள் 12–10–2010.
3. அரசாணை(நிலை) எண்.92, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 02–12–2010.

––––––

<u>ஆணை</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமான உச்சவரம்பை 2010–11 ஆம் நிதியாண்டிலிருந்து முற்றிலும் நீக்குவதால் நவீன செயற்கை அவயங்கள் வழங்கிட, தேவைப்படும் கூடுதல் செலவினமாக ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் 2010–11 ஆம் நிதியாண்டில் கை, கால்களை இழந்த மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் வழங்கிட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை (Budget Estimate)ல் ரூ.25.20 இலட்சமும் மேலே ஒன்றில் காணும் அரசாணையின் மூலம் ரூ.10.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.35.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்கு நவீன செயற்கை அவயங்களின் தேவை வெகுவாக குறைந்துள்ளதால், விண்ணப்பிக்கும் மாணவர்கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது என்றும், நவீன செயற்கை அவயங்கள் வேண்டி, பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் கை, கால்களை இழந்தவர்களும் அதிக அளவில் விண்ணப்பித்து வருகின்றனர் என்றும், தற்போது பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரிபவர்களுக்கும் நவீன செயற்கை அவயங்கள் வழங்குமாறு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்

கோரியுள்ளனர் என்றும், கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் வழங்கிட மூன்றில் காணும் அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.24,23,500/– போக எஞ்சிய நிதி ஒதுக்கீடான ரூ.10,96,500/–ல் பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் வழங்கிட ரூ.10,85,000/– நிதி ஒதுக்கீடு வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கோரியுள்ளார். மேலும், நவீன செயற்கை அவயம் தேவைப்படுவோர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், உத்தேச செலவுத் தொகையினை காட்டிலும் நவீன செயற்கை அவயத்தின் விலை குறைவாக இருப்பின், அரசின் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டுத் தொகைக்கு ஏற்ப நவீன செயற்கை அவயங்களை கூடுதலாக வாங்கிடவும், உத்தேச செலவினை காட்டிலும் நவீன செயற்கை அவயத்தின் விலை அதிகமாக இருப்பின் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள் நவீன செயற்கை அவயங்கள் எவ்வளவு எண்ணிக்கை வாங்க இயலுமோ அதற்கேற்ப வாங்கிடவும் அனுமதி அளிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, 2010–11 ஆம் நிதியாண்டில் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு நவீன செய்கை அவயங்கள் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ.35.20 இலட்சத்தில், கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு நவீன செயற்கை அவயங்கள் வழங்கியது போக மீதமுள்ள தொகையான ரூ.10,96,500/–ல் நவீன செயற்கை அவயம் ஒன்றின் தோராய விலை ரூ.17,500/– என்ற வீதத்தில் 62 பணிபுரியும் மற்றும் சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயங்கள் வாங்கி வழங்கிட ரூ.10,85,000/–ஐ (ரூபாய் பத்து இலட்சத்து எண்பத்தி ஐயாயிரம் மட்டும்) கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | நவீன செயற்கை அவயம் | ஒன்றின் தோராய விலை | பணிபுரிவோர் / சுயதொழில் புரிவோர் | மொத்த தொகை. | வாங்கும் முறை |
|---|---|---|---|---|---|
| 1. | கால் முட்டிக்கு கீழ் (Below Knee) பாதிக்கப்பட்ட பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறன் படைத்த நபர்களுக்கு நவீன செயற்கை அவயம் | ரூ.17,500/- | 62 | ரூ. 10,85,000 | தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம். |

3. உத்தேச செலவுத் தொகையினை காட்டிலும் நவீன செயற்கை அவயத்தின் விலை குறைவாக இருப்பின், ஒப்பளிப்பு செய்யப்பட்ட நபர்களுக்கு நவீன செயற்கை அவயங்கள் வாங்கி வழங்கிடவும், உத்தேச செலவினை காட்டிலும் நவீன செயற்கை அவயத்தின் விலை அதிகமாக இருப்பின் அரசின் மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டிற்குள் நவீன செயற்கை அவயங்கள் எவ்வளவு

எண்ணிக்கை வாங்க இயலுமோ அதற்கேற்ப வாங்கி வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அனுமதியளிக்கிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன் –101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம் –JH. மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் –24 பொருள்களும் வழங்கலும்".

(த.தொ.கு. 2235–02–101–JH 2404)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சந)/1791/10, நாள் 19.01.11 –ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**<u>நகல்:-</u>**

நிதி (சந) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.